# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, புலுமெண்டால் அபிவிருத்திச் சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1984, ஜூன் மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, ஜூன் மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 40* *தபாற் செலவு : சதம் 60*

# 1984 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, புலுமெண்டால் அபிவிருத்திச் சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்

[1984, ஜூன் மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 57/82.

## புலுமெண்டால் அபிவிருத்திச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"புலுமெண்டால் அபிவிருத்திச் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டு நடாத்துவதற்குமென இதன்முன்னர் கொழும்பில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட சங்கம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப்பெயர்.*

1. இச்சட்டமானது, 1984 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, புலுமெண்டால் அபிவிருத்திச் சங்க (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*புலுமெண்டால் அபிவிருத்திச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

2. இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) புலுமெண்டால் அபிவிருத்திச் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ள ஆட்களும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தில் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான, அத்தகையோரான அத்தனையாட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "புலுமெண்டால் அபிவிருத்திச் சங்கம்" என்ற பெயரின் கீழும் மருடத்தின்கீழும் இடையறுவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தலும் குழுவாகவாதலும் வேண்டும்; அத்துடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதை மாற்றுவதற்கும் திருத்துவதற்குமான முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படும் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) பொதுவாகவும், முக்கியமாக கொழும்பு, புலுமெண்டால் வீதியிலும் அதற்கருகிலும் உள்ள இடப்பரப்பிலும் வறுமைக்கும் இடுக்கணுக்கும் எதிராக நிவாரணமளித்தல் ;

(ஆ) சொல்லப்பட்ட இடப்பரப்பில் வதிகின்ற பிள்ளைகளினதும் வயது வந்தோரினதும் கல்விக்கு உதவி செய்தல் ;

(இ) சொல்லப்பட்ட இடப்பரப்பில் வதிகின்ற ஆட்கள் தொழில்பெறுவதிலும் தொழில் கொண்டுநடாத்துவதிலும் அவர்களுக்கு உதவி புரிதல் ;

ஏ 61769—2,675 (03/82)

(ஈ) பொதுவில் கூட்டுத்தாபனத்திற்கு அவசியமானவையென தோன்றக்கூடியவாறான அத்தகைய நன்மைகளையும் உதவிகளையும் சொல்லப்பட்ட இடப்பரப்பில் வதிகின்றவர்களுக்கு வழங்குதல்; அத்துடன்

(உ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான, உகந்தனவான, இடைநேர்விளைவான அத்தகைய வேறு செயல்களைச் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்; இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன் பெறுதற்கும் அல்லது திரட்டுதற்கும், கொடைகளையும், நன்கொடைகளையும் பெறுவதற்கும், சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அவற்றிற்கிணங்க தெரிவுசெய்யப்படும் பதவிதாங்குநர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த நிறைவேற்றுக்குழுவொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழு இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவி வகிக்கும் சங்கத்தின் நிறைவேற்றுக்குழுவாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் விசேட பொதுக்கூட்டத்திலும் வாக்களிக்க உரித்துடையரான கூட்டுத்தாபன உறுப்பினரின் மூன்றிலிரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டும், உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை நீக்குதல் என்பவற்றுக்காகவும், நிறைவேற்றுக்குழுவினதும், கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர், முகவர், சேவையாளர் என்போரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், அத்துடன் பொதுவாக அதன் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும் என்பனவற்றுக்காகவும் கூட்டுத்தாபனம் காலத்துக்குக்காலம் விதிகளை ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாகும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் அவை மாற்றப்படலாம், அவற்றிற்குச் சேர்க்கப்படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

**சங்கத்திடமிருந்து செல்மதியாகவுள்ளனவும் அதற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.**

7. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் சங்கத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், சங்கத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்படல் வேண்டும் என்பது.**

8. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, நிறைவேற்றுக் குழுவின் மூன்று உறுப்பினர்கள் முன்னிலையிலல்லாது எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களைக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும், அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம் என்பது.**

9. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலுடையதாதலும் இயலுமானதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகை கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள உள்ள முழுத் தத்துவத்துடனும் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

**குலைக்கப்பட்டதன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.**

10. கூட்டுத்தாபனம் குலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர், எத்தகையதுமான ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவுமான வேறு கழகத்திற்கு அல்லது கழகங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய கழகமானது அல்லது கழகங்களானவை கூட்டுத்தாபனம் குலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணல்.**

11. இச்சட்டத்தில் உள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்களிலிருந்து, அவர்கள் மூலம் அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த ஏனையோரின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.